பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொது நூலகம்

# செல்வாபுரத்தில் ஆயிரம் குடும்பங்கள் வெளியேற உத்தரவு!

விலை ரூபா 1-25

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 சித்திரை 4 ஷஃபா 7 இதழ் 65
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 17-4-1986

## நிலாவெளி 60 குடும்பங்கள் நடுத்தெருவில்!

(திருமலையிலிருந்து நமது நிருபர்]

நிலாவெளிப்பகுதியில் 3ம் கட்டைதடை இராணுவமுகாமைச் சுற்றிவர உள்ள 60 தமிழ்க் குடும்பங்கள்வீடுவாசல்களைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளன.

இதனைத்தொடர்ந்து அவர்கள் நடுத்தெருவில் அவலநிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 10 கடைகள் குண்டுகள் வைத்தும், உடைத்தும் தகர்க்கப்பட்டுள்ளன.

அதேசமயம் நிலாவெளிப் பகுதியிலுள்ள செல்வநாயகபுரத்தில் வசித்துவரும் ஆயிரத்துக்குமேற்பட்ட குடும்பங்களையும் வெளியேறும்படி இராணுவத்தினர் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

3ம் கட்டைப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட 60 தமிழ்க்குடும்பங்களும் திருகோணமலையிருக்கும் அகதிகள் முகாம்களில் தங்குவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நகர வீதிகளில் இந்த 60 தமிழ்க் குடும்பங்களும் தங்கள் குழந்தை குட்டிகளுடன் நேற்று வீடு வீடாக உணவு தேடி அலைந்து திரிந்ததைக்காணக்கூடியதாக இருந்தது

அகதிகளாக்கப்பட்ட இக்

(7-ம் பக்கம் பார்க்க)

# ● இந்திய மத்தியஸ்தத்தில் இலங்கை மக்கள் அனைவரும் நம்பிக்கை இழக்கின்றனர்!

## 'இந்து'வுக்கு தொண்டமான் பேட்டி

(திருச்சி)

**"இலங்கையிலுள்ள தமிழர் மட்டுமன்றி இலங்கை மக்கள் அனைவருமே இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழக்கத் தலைப்பட்டுள்ளனர். பிரச்னைகள் மேலும் பெருகிவருகின்ற போக்கில், காலம் கழிந்துகொண்டு போகின்றதே தவிர இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் தமிழர் பிரச்னை குறித்து நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் திட்டவட்டமான முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டுள்ளதாக எனக்குத் தெரியவில்லை".**

திருச்சியில் 'இந்து' பத்திரிகைக்குஅளித்தசிறப்புப்பேட்டியில் இலங்கை கிராமியத் தொழிற்றுறை அமைச்சர் திரு எஸ் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார். இப்பேட்டியில் அமைச்சர் தொண்டமான் ப்மலும் தெரிவித்ததாவது;

''இந்திய தானுகவே முன்வந்து புகலிடம் அளித்த இலங்கைத் தமிழ் தலைவர்களுடன் பேசி ஒரு முடிவுக்கு வர இந்தியப் பிரதமருக்கு என்ன தடங்கல் இருக்கிறதுஎன்பதுபெரும் புதிராகவுள்ளது. இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றி இந்திய அரசு ஆழ்ந்த கவலை தெரிவித்த பின்னர்தான் இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் கூடுதலாகக் கொல்லப்பட்டு வருகின்றனம விசித்திரமாயுள்ளது

''திரு. ஜயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் ஈழத்தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண முடியாவிட்டால் வேறெந்தக் காலத்திலும் இப்பிரச்னைக்குத் தீர்வுகாண்பது சாத்தியமில்லை. (ஷ)

## சூட்டுக் காயங்களுடன் 7 சடலங்கள்

(மட்டக்களப்பு)

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் 7பேரின் சடலங்கள் பொலனறுவை ஆஸ்பத்திரியில் ஆயுதப்படையினரால் ஒப்படைக்சப்பட்டுள்ளன.

பொத்துவில், வடமுனை, திருக்கோயில் பகுதிகளிருந்து இச்சடலங்கள் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானவர்களின் மற்றும் விபரங்கள் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ய-மா)

### லிபியா மீதான தாக்குதலைக் கண்டித்து

## இன்று யாழ். நகரில் ஹர்த்தால் ஊர்வலம்!

(யாழ்ப்பாணம்)

லிபிய நாட்டின் மீது அமெரிக்கா நடாத்தியகொடூரமான விமானத்தாக்குதலைக் கண்டித்து இன்று நடாத்தவிருக்கும் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கும் பூரணஹர்த்தாலுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குமாறு இஸ்லாமிய இளைஞர் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது

இன்று காலை 8 மணிக்குப் புதிய சோனகதெரு பள்ளிவாசலிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி முஸ்லிம் கல்லூரி வீதி, நாவலர் வீதி, மானிப்பாய் வீதி ஊடாக யாழ் கச்சேரியைச்சென்றடையும்.

இது சம்பந்தமாக இஸ்லாமிய இளைஞர் அமைப்பு துண்

[7ம் பக்கம் பார்க்க]

## ஓமந்தைக் காடு எரிகிறது!

(யாழ்ப்பாணம்)

ஓமந்தையில் இராணுவத்தினர் தங்கியுள்ள பகுதிகளில் உள்ள காடு தீமூட்டப்பட்டு எரிக்கப்பட்டு வருவதாகவும், இடைக்கிடை துப்பாக்கிச் சத்தங்களும் கேட்பதாகவும் தகவலொன்று தெரிவிக்கிறது. (ஐ)

## "இந்திய அரசின் கருத்தறியாமல் எதுவித பேச்சும் இனி இல்லை!" — 'உமா'

(திருச்சி]

''இந்திய அரசின் நிலைப்பாட்டினைச் சரியாக அறிந்து கொள்ளுவதற்கு முன்னர் ஈழத்தமிழர் பிரச்னைக்குத்தீர்வு காணுகின்ற பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற நாம் தயாராயில்லை,''

கடந்த செவ்வாயன்று முன்னுள் இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி 'இந்து' நிருபருக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மக்கள் விடுதலைக் கழக செயலதிபர் திரு உமாமகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

(7ம் பக்கம் பார்க்க)

## நேற்றும் தாக்குதல்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பளைப் பகுதியில் நேற்று நண்பகல் திடீரென ஹெலிகொப்டர் சுற்றிவட்டமிட்டு பலத்த தாக்குதல் நடத்தியதில் ஒரு பெண் உட்பட ஆறுபேர் காயமடைந்தனர். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மாரியம்மன் கோவில் வயிரவகோவில் முதலியன சேதமடைந்தன,

### யாழ். நகரில்

## 150 பவுண் நகைகளும் ரொக்கமும் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

யாழ்-கச்சேரி நல்லூர் வீதியில்உள்ள வீடொன்றில் 150 தங்கப்பவுண் நகைகளும், 35 ஆயிரம் ரூபா ரொக்கமும் வேறுசில பொருள்களும் ஆயுத முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்று இரவு 7-30 மணியளவில் செல்லையா பாலசுப்பிரமணியம், நல்லதம்பி இரத்தினசபாபதி ஆகிய இரு குடும்பங்கள் இணைந்து வாழ்ந்து வரும் வீட்டிலேயே இக் கொள்ளை நடந்துள்ளது.

'மொறிஸ் ஒக்ஸ்போட்' காரில் வந்த ஆயுதம் தாங்கிய எட்டு நபர்களில் இருவர் வீதியில் காவல் நிற்க, வளவினுள் புகுந்த ஆறு நபர்கள் வீட்டிலுள்ளவர்களைப் பயமுறுத்தி அறை ஒன்றினுள் இரு குடும்பத்தவரையும் படுக்கவைத்து

[7ம் பக்கம் பார்க்க]

### அரசு-தாதிகள் உடன்பாடு:

## இன்று வேலைக்குத் திரும்புவர்

[கொழும்பு]

கடந்த 27 தினங்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த பொதுச்சேவை தாதிகள் ஐக்கிய சங்கத்தினர் இன்று வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்புகிறார்கள்'

தேசிய பாதுகாப்பமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி உட்பட அரசதரப்பின் முக்கியஸ்தர்களுடன் தாதிமார் சங்கப் பிரதிநிதிகள் நடாத்திய பேச்சு வார்த்தைகளின் போது இரு தினங்களில் தாதிமார் முன்வைத்த கோரிக்கைகள் சாதகமானமுறையில் பரிசீலிக்கப்படும் என அளிக்கப்பட்ட வாக்குறுதியினையடுத்தே சமரச அடிப்படையில் தாதிமார் இன்று நண்பகல் வேலைக்குத் திரும்புகின்றனர்.

எனினும், புத்தாண்டையொட்டி வட, கிழக்குப் பகுதிகளுக்கு வந்த தாதிமார்கள்

(7ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

Honda C 70 புதியமொடல் 82 ஸ்ரீ சிவப்பு ரூபா 8,750/- மாலை 3—6 மணிவரை, ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி. வட்டுக்கோட்டை. [C 1806]

நல்ல நிலையிலுள்ள National NV - 300, EN Vedio Deck உடன் விற்பனைக்கு உண்டு N. B. சர்மா, 29, ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். [C 1808]

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல்வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். C 1785

மல்லாகம் புன்னாலைக்கட்டுவன் வீதியில் குப்பிழான் ப. நோ கூ. சங்கத்திற்கு எதிரேயுள்ள 5¼ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு தொடர்பு: S, மகேஸ்வரா அன்னவில்லா, கற்பகப்பிள்ளையார் ஒழுங்கை, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். [C 1447]

### FOR SALE

Moutrie Piano - in good condition. Contact: Mrs. Francis, 9/2 Eachamoddai Road, Jaffna. C 1780

### வகுப்புகள்

[1] வயறிங் - 1½ மாதம். [2] மோட்டார் றிவைண்டிங் - 3 மாதம். [3] City and Guilds of London Institute பயிற்சிகள் 18-4-86 ஆரம்பமாகின்றன. ஓமேகா, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம். [ஈழநாட்டிற்கு எதிரில்] [C 1729]

புலோலி ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச் சாக்கு விற்பனைக்காகக் கேள்விப்பத்திரம் கோரல்

மேற்படி ப.நோ. கூ. சங்கத்தின் பிரதம களஞ்சியத்தில் (3000) மூவாயிரம் வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/-உம், கேள்விப் பத்திர விண்ணப்பப் படிவம் ஒன்றுக்காக ரூபா 5/-உம் செலுத்திச் சங்க வேலை நேரத்தில் சாக்குகளைப் பார்வையிட்டும் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் 25-04-86 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக்கூடியதாக, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், ''வெற்றுச் சாக்குக் கேள்விப் பத்திரம்'' என எழுதப்பட்டுப் பதிவுத் தபால்மூலம் அரக்கு வைக்கப்பட்டு கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

பொதுமுகாமையாளர்,
புலோலி ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.
15-04-1986.

[A 585]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

# AMERICAN TRAVELS

## அழைக்கிறது

★ ஜேர்மனி ★ இத்தாலி
★ கனடா ★ பிரான்ஸ்
★ கோலன்ட்

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் ஜெகதாஸ் ஏப்ரல் 28-ம் திகதி உங்களை அழைத்துச் செல்வார். உங்கள் பாஸ்போட்டை ஏப்ரல் 20-ம் திகதிக்கு முன் எம்மிடம் ஒப்படைக்கவும். துரிதகெதியில் பாஸ்போட், Bond செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

★ திரு ரேட் சென்ரர்,
பலாலி றேட்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

C 1804

---

## பிரயாண ஒழுங்குகள்

### கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர்

**21-ம் திகதி** உங்களை அழைத்துச்செல்வார்.

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

★ குவைத்தில் சாரதியாக செல்பவர்களுக்கு ஏற்ற வருமான ஒழுங்குகளும் உடனடியாக செய்து கொடுக்கப்படும்.

★ மாலைதீவு செல்வதற்கு பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

பாஸ்போட், BOND, ரிக்கற் முதலியனவும் உடனுக்குடன் செய்துதரப்படும்.

# GROUP ATLANTIC

## HOSPITAL ROAD, JAFFNA.

(அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக)

(A 420)

---

## கல்வியூட்டும் வலிமை மிகு சக்தி

தொழிற் சங்கங்களை ''தொழிலாளி வர்க்கத்தின் அடிப்படை மூலம்'' என கார்ல் மார்க்ஸ் கருதினார். அவரது தலைமையின் கீழ் இயங்கிய முதலாவது அகிலம் என்றும் அழைக்கப்படும் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பிரதான சாதனைகளிலொன்று, தொழிற்சங்கப் பிரச்சினையில் அது வகுத்தெடுத்த தெளிவான மார்க்கமாகும்.

அன்றாடப் போராட்டத்தில் தொழிற் சங்கங்களின் மகத்தான மதிப்பை அகிலம் கண்டது. தொழிலாளி வர்க்கத்துக்கு கல்வியூட்டும் வலிமைமிகு சக்தியாகவும் அதைக் கண்டது, பாட்டாளி வர்க்க விடுதலைக்கான போராட்டத்தில் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அதைக் கருதியது.

தொழிற் சங்கங்கள் காட்டி வந்ததைவிட அதிகமாக அரசியல் நடவடிக்கையில் கவனம் காட்டுமாறும், அத்துடன் சாதாரண தொழிலாளர்களையும், விவசாயத் தொழிலாளர்களையும் சங்கங்களின் அணிகளில் சேர்த்துக் கொள்ளுமாறும் அகிலம் கேட்டுக் கொண்டது.

உழைக்கும் வர்க்கத்தை ஒடுக்குவோருக்கு எதிரான போராட்டத்தைப் பற்றிய அறிவைப்பெற தொழிற் சங்க இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான சட்டத்தரணி த. துரைசிங்கம் எழுதிய 'லெனினும் ஆசியாவும்' என்ற நூலைப் படியுங்கள்.

இந்நூலின் தமிழ், சிங்கள, ஆங்கிலப் பதிப்புகள் புத்தகசாலைகளில் கிடைக்கும்.

**விலை ரூபா 10/-**

சோஷலிச ஆய்வுக் கழகம்
31, வில்சன் வீதி,
கொழும்பு-12

C 1803

---

முத்துஐயன்கட்டு,
ப. நோ. கூ. சங்கம்,
ஒட்டுசுட்டான்.
09-04-1986

## பதவி வெற்றிடம்
### கணக்குப் பதிவாளர்
### சம்பளத் திட்டம்
### இல: 301/11

முத்துஐயன்கட்டு ப. நோ கூ. சங்கத்தால் கணக்குப் பதிவாளர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 28-4-86ம் திகதிக்கு முன்னர் தலைவர், முத்துஐயன்கட்டு ப. நோ. கூ. சங்கம், ஒட்டுசுட்டான் என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்துடன் கல்வித் தகைமைப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சம்பளத் திட்டம்:-**
300-15 x 12. 20x3-540.

**கல்வித் தகைமைகள்:-**

அ. கூட்டுறவுப் பணியாளரின் 12-வது சம்பளத் திட்டத்தில் கணக்கியல் பகுதியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 13-வது சம்பளத் திட்டத்தில் கணக்கியல் பகுதியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. க. பொ. த. (சா/த) 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம்/வர்த்தக கணிதம்/தூய கணிதம், சிங்கள / தமிழ்ப் பாஷை என்பனவற்றினை உள்ளடக்கியதாக 5 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களிலான சித்தி.

**வயது:-**
20 தொடக்கம் 35 வரை.
(சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை நியதியில்லை)

**பிணை:-**
ரொக்கம் ரூபா 1,500/-

பொதுமுகாமையாளர்,
முத்துஐயன்கட்டு
ப. நோ. கூ. சங்கம்.

[A 584]

---

மாணவர்கள்

## கல்வியிலும் விளையாட்டிலும் ஈடுபடவேண்டும்''

(யாழ்ப்பாணம்)

''கல்வியே மக்களின் கண்ணாகும். எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்த நெருக்கடியிலும் கல்வியை நாம் விட்டுவைக்க முடியாது. உளவளர்ச்சியும் உடல்வளர்ச்சியும் நல்ல ஆரோக்கியமான சமுதாயத்தினை உருவாக்கும். இந்த வகையில் எமது மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் உற்சாகமாக ஈடுபட்டு எந்த நிலைக்கும் முகம்கொடுத்து வாழக்கூடிய தகுதியைப் பெற வேண்டும்'' என்று யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் யாழ். புனித ஜேம்ஸ் மகாவித்தியாலய கடந்தவார இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை வித்தியாலய அதிபர் திரு. அ. ஸ்ரானிஸ்லாஸ் கல்லூரிக் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார். வைபவத்தில் யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கமும் பாரியாரும் பிரதமவிருந்தினர்களாகவும் இளைப்பாறிய வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியர் திரு. ஏ. யோசேப் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்

வித்தியாலய அதிபர் தமது உரையில், ''மாணவர் பருவம் மனிதவாழ்க்கையில் மிக முக்கியமானது. இப்பருவத்திலேயே வாழ்க்கைத் தத்துவங்களையும் அறிவு வளர்ச்சியையும் பெற்றுக் கொள்ளுகின்றார்கள் விளையாட்டு மைதான நிகழ்ச்சிகள்மூலமாக மாணவர்கள் நீதிக்குத் தலைவணங்குதல், நேர்மையைக் கடைப்பிடித்தல், ஒழுங்கிற்குக் கட்டுப்படுதல், வெற்றியில் மகிழ்தல், தோல்விக்குக் கலங்காதிருத்தல் என்னும் அரிய வாழ்க்கைத் தத்துவங்களை அனுபவரீதியாக உணர்ந்து கொள்ளவேண்டும்'' என்றார்.

(வி)

---

## 88 AUG. A/L
### பிரிவு II
## ஆரம்பம்:- 19-04-1986
### SAT. 7-30 A. M.

PHYSICS — 7-30 திரு. வர்ணம்
CHEMISTRY — 8-30 திரு. தில்லைநாதன்
ZOOLOGY — 9-30 திரு. நாகநாதன்
BOTANY — 10-30 திரு குகாதரன்
PURE and APP — 9-30 - 11-30 திரு. நல்லையா

விபரங்கட்கு:

## NEW MASTER INSTITUTE,
B. M C LANE,
JAFFNA.

(A 445)

---

# BECON
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

## 88 A/L

PURE, APP — திரு, நல்லையா
PHYSICS — திரு. யோகேந்திரா
CHEMISTRY — திரு. அன்ரன்
BOTANY — பிரபல ஆசிரியர்
ZOOLOGY — திரு, தம்பிராஜா

ஆரம்பம்: 19-4-86 நேரம் — 7-30

## 87 A/L 88

பொருளியல் — திரு. வரதராஜன்
கணக்கியல் — திரு. மரியதாஸ்
அளவையியல் — திரு. S S மனோகரன்
வர்த்தகமும் நிதியும் — திரு ரட்ணம்
இந்து நாகரிகம் — அருள்நங்கை
புவியியல் — திரு. சண்
தமிழ் — விரிவுரையாளர்

ஆரம்பம்: 19-4-86 [சனி] 11-00 மணி

[A 446]

### அமெரிக்க விமானத் தாக்குதல்

# கடாபியின் வளர்ப்பு மகள் பலி!

# இருபுதல்வர்கள் படுகாயம்!

## 100பேர் மரணமாகியிருக்கலாமென அச்சம்

திரிப்பொலி, ஏப். 16

**நேற்றுமுன்தினம் லிபியாவில் நடத்தப்பட்ட அமெரிக்க விமானத் தாக்குதலில் லிபிய அதிபர் கடாபியின் 16 மாதங்களேயான வளர்ப்பு மகள் ஹனு கொல்லப்பட்டார். இரு புதல்வர்கள் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுதவிர சுமார் 100 பேர்வரை இந்த அமெரிக்கக் குண்டுவீச்சினுல் இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதிபர் கடாபியின் திரிப்பொலியில் உள்ள பாசறையொன்றில் தங்கியிருந்தவேளையிலேயே அவரது வளர்ப்பு மகள் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டார். இரு புதல்வர்கள் காயமடைந்தனர். இவர்களில் ஒருவருக்கு 2 வயது. மற்றையவருக்கு 4 வயதாகும்.

திரிப்பொலி, பெங்காஸி ஆகிய இரு லிபிய நகரங்களிலுமுள்ள ஐந்து இராணுவ கேந்திரப் பகுதிகளிலேயே அமெரிக்க விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த கேந்திரப் பகுதிகளில் ஒன்ருன விமானத்தளமொன்றிலிருந்த சோவியத் தயாரிப்பு மிக்-23 ரக விமானங்களும், லிபியாவின் இராணுவ போக்குவரத்து விமானங்களும் குண்டுவீச்சுக்கிலக்காகிப் பெருஞ்சேதமடைந்தன. இவற்றுடன் தொலைதொடர்பு நிலையமொன்றும் விமான எதிர்ப்பு பீரங்கித் தளமொன்றும் சேதமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் அதிசக்தி வாய்ந்த 'எவ்-1-11' ரகவிமானங்களே இக்குண்டு வீச்சில் பங்குபற்றின. இவை லிபியப் படைகளின் விமான எதிர்ப்புப் பீரங்கி வேட்டுக்களை கம்பியூட்டர்கள் முறையிலான லேசர் கதிர்கள்மூலம் முறியடித்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறியடிப்பை யடுத்து அவ்வேட்டுக்கள் மீண்டும் நிலத்தில் வந்து வெடித்ததாலேயே சட்டிடங்கள் மற்றும் குடிமனைப் பகுதிகளுக்கும் சேதமேற்பட்டதாக அமெரிக்க போர் விமான ஓட்டிகள் கருத்து வெளியிட்டனர்.

பதினெரு பிள்ளைகளின் தந்தையான லிபிய அதிபர் கேர்ணல் கடாபி, இவ்விமானத் தாக்குதலையடுத்து இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அவர் சோவியத் தூதுவரைச் சந்தித்ததுடன் சிரியாவுடனும் தொடர்பு கொண்டு மேல் நடவடிக்கை பற்றி ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

லிபியாவில் திரிப்பொலி, பொங்காஸி ஆகிய நகரங்களில் குண்டுவீச்சினுல் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதில் பலர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

### எழுத்தாளர்களுக்கு கௌரவம்

சென்னை, ஏப் 16

தமிழ்ப் பல்கலைக்கழகங்களின் ஆட்சிக்குழு உறுப்பினராக பிரபல தமிழ் நாவலாசிரியை லக்ஷ்மி நியமிக்கப்பட்டுள்ளார். இதனைவிட மற்ளுரு நாவலாசிரியை சிவசங்கரி மேல்சபை ராஜ்யசபா உறுப்பினராக நியமிக்கப்படவுள்ளார். (கெ)

உலகச் செய்திகள்

## லிபிய அதிபருக்கு புரியக்கூடிய மொழியில் பாடம் புகட்டியுள்ளோம்" — றீகன்

வாஷிங்டன், ஏப் 16

"லிபிய அதிபருக்குப் புரியக்கூடிய மொழியிலேயே அமெரிக்கா அவருக்குப்பாடம் புகட்டியுள்ளது" என்று லிபிய விமானத் தாக்குதல் குறித்து அமெரிக்க அதிபர் திரு. றெனல்ட் றீகன் கருத்து வெளியிட்டுள்ளார்.

"பயங்கரவாதம்தான் லிபியத் தலைவருக்குக் கைவந்தகலை. எனவே இதனை முறியடிக்கும் பாடத்தையே நாம் அவருக்குப் புகட்டியுள்ளோம். அவசியமானதையே செய்துள்ளோம். வேண்டுமானுல் மீண்டும் இதனைச் செய்வோம் என்று திரு. றீகன் மேலும் எச்சரித்துள்ளார்.

உலகிலுள்ள அப்பாவி அமெரிக்கர்கள்மீதும், அமெரிக்க நிலையங்களமீதும் லிபிய அதிபர் கடாபியின் கையாட்களே திட்டமிட்டுப் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அவர் தொடர்ந்து கூறினுர்.

இதேவேளை லிபியத் தாக்குதலையடுத்து அதிபர் கடாபி பழிவாங்கும் நடவடிக்கைகளில் இறங்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்காரணமாக அமெரிக்க அதிபர் றீகன் அவரது குடும்பத்தினர் மற்றும் உயர்மட்ட அமெரிக்க, அரசியல், ராஜதந்திர இராணுவ முக்கியஸ்தர்களின் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (கி)

### இலங்கை தமிழர் விவகாரம்:

# புதுடில்லிப் பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்டம்!

புதுடில்லி, ஏப் 16

இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக புதுடில்லிப் பல்கலைக் கழக மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நேற்று நடத்தினர்

இப் பல்கலைக் கழகத்தின் 'ஈழ நண்பர்கள் அமைப்பு' என்ற பிரிவும் சட்டமாணவர் பேரவையும் இணைந்தே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

"இலங்கை அரசின் யோசனைகள் இலங்கைத் தமிழர்களைத் திருப்திப்படுத்த மாட்டா" என்று இந்த ஆர்ப்பாட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கூடவே இந்திய அரசு இலங்கை விவகாரத்தில் அக்கறையற்றிருப்பதாகவும், விரைவாகஇப்பிரச்னையைத் தீர்க்க உதவ வேண்டுமெனவும் இந்த ஊர்வலத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

புதுடில்லி பல்கலைக்கழகத்தின் அநேக மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்கெடுத்தனர். [கி)


# LANKA CEMENT LIMITED

KANKESANTHURAI.

## ஏல விற்பனை

பாவிக்கப்பட்ட துண்டுக் கம்பிகள், முறுக்குக் கம்பிகள், "ஆங்கிள் அயன்கள்" (Angle Iron), 'H' வடிவ உருக்குத் தீராந்திகள், ஆயுதங்கள் என்பன

1986-04-20 ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணி முதல் லங்கா சீமெந்து லிமிட்டெட் தொழிற்சாலையில் ஏல விற்பனையில் விடப்பட உள்ளன.

மேற்படி பொருட்களைப் பார்வையிட விரும்பும் கொள்வனவாளர்கள் 1986 04-19 சனிக்கிழமை காலை 9 00 மணி முதல் மாலை 4-00 மணிவரை தொழிற்சாலை வளவில் பார்வையிடலாம்.

பொருட்களின் விலையின் 3-ம் கூற்று முடிவடைந்தஉடன் முழுத்தொகையின் 1/3 பகுதிப் பணம் கொள்வனவாளரால் செலுத்தப்பட்டு, மிகுதி அடுத்த 24 மணி நேரத்தில் செலுத்தப்பட வேண்டும்.

பொருட்கள் பகுதிபகுதியாக கொள்வனவு செய்வோர் ஏல விற்பனைத் திகதியான 20-04-1986இல் இருந்து 02 நாட்களுக்குள்ளும் முழுக் கூறுகளும் ஒன்ருகக் கொள்வனவு செய்வோர் மேற்குறிப்பிட்ட தினத்தில் இருந்து (5) ஐந்து நாட்களுக்குள்ளும் விற்கப்பட்ட பொருட்களை அகற்ற வேண்டும்.

பொது முகாமையாளர்,

லங்கா சீமெந்து லிமிட்டெட்

காங்கேசன்துறை.

16-04-86. ((A 441)


### அமெரிக்காவுடன் உயர்மட்டப் பேச்சுக்கு

# சோவியத் மறுப்பு!

மாஸ்கோ, ஏப் 16

லிபியாமீதான அமெரிக்கத் தாக்குதலையடுத்து அமெரிக்காவுடன் உயர்மட்டப் பேச்சுக்களை நடத்த சோவியத் யூனியன் மறுத்துள்ளது

சோவியத் வெளிநாட்ட மைச்சர் கொட் நாட்ஸே, அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ஸ் ஆகியோருக்குமிடையே இறுதிப்பேச்சுவார்த்தைகள் அடுத்தமாதம் வாஷிங்டனில் இடம்பெறவிருந்தது.

இப்பேச்சுக்கள், எதிர்வரும் நவம்பர் மாதம் சோவியத் தலைவர் கோபச்சேவ், அமெரிக்க அதிபர் றெனல்ட் றீகன் ஆகியோருக்குமிடையே உச்சி மகாநாட்டுச் சந்திப்புக்கான ஆயத்தங்களைச் செய்யம்வகையில் இடம்பெறவிருந்தது

லிபியா தாக்கப்படுமானுல் அமெரிக்காவுடன் பேச்சு நடத்த சோவியத்யூனியன் முன்வரமாட்டாது என்று சோவியத் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தது. இதனடிப்படையிலேயே சோவியத் தற்போது அமெரிக்காவுடன் பேச்சுக்களை நடத்த மறுத்துள்ளது

இதேவேளை அமெரிக்கா இம்மறுப்புக் குறித்துக் கருத்து வெளியிடுகையில் சர்வதேச பயங்கரவாதத்தை எதிர்க்க அமெரிக்காவுடன் சோவியத் யூனியன் ஒன்றுபட வேண்டும் என்று கேட்டுள்ளது. (கி)

### காயங்களுடன் சடலம்

(பண்டத்தரிப்பு)

சங்கானை மத்திய பஸ் நிலையத்திற்கு சமீபமாக சுமார் 35 வயதுடைய நபர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறந்து கிடக்கக் காணப்பட்டார். இச்சடலம் பிரான்பற்று கிராமத்தைச் சேர்ந்த மக்கோனுஎன்றழைக்கப்படும் மகாராசா என்பவருடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்தவரது சடலத்துக்கருகில் காணப்பட்ட துண்டுப் பிரசுரமொன்றில் கொலை, கற்பழிப்புக்களில் ஈடுபட்டவர் என்பன போன்ற வாசகங்களுடன் பொது மக்கள் என்று அப்பிரசுரத்தன் அடிப்பகுதியில் எழுதியிருக்கக் காணப்பட்டது.

### ஆங்கில பிரெஞ்சு நூல்களுக்கு தீ

[திரிப்பொலி]

லிபிய நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் இருக்கும் ஆங்கில பிரெஞ்சு நூல்கள் அனைத்தையும் தீயிட்டுக் கொளுத்துமாறு லிபிய நாட்டு ஜனுதிபதி கேர்ணல் கடாபி அவசர உத்தரவொன்றை வழங்கியுள்ளார்.

இந்த உத்தரவையடுத்து, ஆயிரக் கணக்கான நூல்கள் தீயில் எரிந்து நாசமாகின மாணவர்களிடையே தேச உணர்வையும், மொழிப்பற்றையும் ஏற்படுத்தும்வ இந்நடவடிக்கையாகும. [கெ]

## மணி வாக்கு

கலகம் பிறக்க வேண்டும். கலகத்தில் நின்றே அமிழ்து பிறக்கும்.

— சிவயோகசுவாமிகள்

# நமது நோக்கு

## இடையில் நமக்கு நேர்ந்த கேடு

"கவிஞர்களின் அருமை பெருமைகளை மதிப்பிட்டு உணர்தல் என்பது, கவிஞர்களுக்கு மட்டுமே உரிய தனிப்பெருஞ் சிறப்பு ஆற்றலாகும்; அதுவும்கூட எல்லாக் கவிஞர்களுக்கும் அமைவது அன்று" என்று ஷேக்ஸ்பியர் காலத்தில் வாழ்ந்த பென் ஜோன்சன் (டாக்டர் ஜோன்சன் அல்ல) என்ற இலக்கியத்திறனாய்வாளர் கூறியிருக்கிறார்.

புலமை மிக்கவரைப் புலமை தெரிதல் புலமிக்கவர்க்கே முடியும்; புலமை என்பது பேரறிவு. பேரறிஞர்களைப் புலவர்கள் என்று கூறுவது எவ்வகையிலும் தவறாகாது.

எங்கள் அனுபவத்திலேயே புலவர்குலம் என்ற பிரபலமுடைய குடும்பத்திலே சொல்லோவியத்தில் விளங்கிய பெரும் புலவனின் வம்சாவளியில் கணிதம், விஞ்ஞானம் என்ற துறைகளில் புலமை பெற்று விளங்கியது புலனாகின்றது.

சிறந்துயர்ந்த கவிஞர்களையும், அவர்தம் நூல்களையும், மேனாட்டு ஆங்கிலப் பேரறிஞர் ஜோன் ரஸ்கின் (John Ruskin) என்பவர் "உண்மைக் குரல்கள் என்றும் வெறும் எதிரொலிகள்" என்றும் பிரித்துக் கூறியிருக்கிறார்.

உணர்ச்சி நிலம் ஓங்கி ஒளிவீசும் அவரின் ஆற்றல் மிக்க அழகிய கவிதைகள் 'உண்மைக் குரல்' என்று புகழ்ந்து போற்றப்படுகிறது. அவர்தம் "எதிரொலிகள்" என்று சொல்லத்தக்க வகையில் ஒரு பெரும் கவிஞரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இன்று பல இளங்கவிஞர்கள் தோன்றியிருக்கின்றனர்.

குறிப்பாகப் பாரதியாரை முன்னோடியாகக் கொண்ட கவிஞர்கள் தமிழ் மக்கள் வாழும் நாடுகள் அனைத்திலும் காணப்படுகின்றனர்.

தமிழ்நாட்டில் முதன் முதலில் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பித் தமிழுணர்ச்சி பெருகச் செய்த பெருந்தகைகள் தமிழரின் தந்தையென்ற அப்பர்சுவாமிகளும், நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பிய ஞானசம்பந்தப்பெருமானுமே.

இவர்களுக்குமுன் வாழ்ந்த திருவள்ளுவர், நாட்டுப்பற்றை வற்புறுத்தவில்லை; ஆயினும் நாட்டுக்குரிய இயல்புகள்பற்றி ஒரு பொது இலக்கியம் சமைத்தவரென்று அகில உலகமே போற்றுகின்றது.

நாடு சீர்குலைந்தவேளையில் அன்னியர் ஆட்சியில் மேனாட்டு மோகத்தால் தமிழ்ப் பண்பாடும் தமிழன் என்ற தனித்துவப் பிறவிக்குரித்தான ஆன்மீகமும் குன்றி நிறைந்தகாலத்தில், சொல் புதிது, பொருள் புதிது, சுவை புதிது என்று போற்றத்தக்கவகையில் பல பல கவிதைகளை இயற்றி பொது மக்கள்முன் உணர்வைத் தட்டி எழுப்பியவர் பாரதியாரே!

அவரைத் தொடர்ந்து வந்த புலவர்கள் கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை- பாரதிதாசன்- நாமக்கல்கவிஞர் - மட்டுநகர் விபுலாநந்த அடிகள் - யாழ்ப்பாணம் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் போன்றோர் பாரதியாரைப் போற்றிப் பாராட்டியுள்ளனர்.

அது எவ்வாறிருந்த போதும் சுதந்திர தமிழ் நாட்டில் பாரதியார் கண்ட பெருங்கனவுகள் இன்றும் நனவாகவில்லையென்பது தெளிவு.

காரணத்தையும் பாரதியார் குறிப்பிடத் தவறவில்லை.

"பெற்ற தாயும் பிறந்த
பொன்நாடும்
நற்றவவானினும் நனி
சிறந்தனவே என்றும்
"தமிழ்த் திருநாடு
தன்னைப் பெற்ற
தாய் என்றும்
கும்பிடடி பாப்பா"

என்றும் நாட்டுப் பற்றின் இன்றியமையாமையை வற்புறுத்தியிருந்தார். நாம் இன்று "ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்" வாழ்கின்றோம் என்பதால் எங்கள் மொழி, கலை, கலாசாரம், தமிழர் பண்பாடு வீழ்ச்சியடைந்த இடைக்காலக் கேடு இன்றும் தொடர்கிறது எங்கள் தவக்குறைவே!

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் பிரிக்கப்படாத இரு தாய்மார். பெற்ற தாய் கதியற்று வயோதிபர் இல்லத்தில் தஞ்சம் கோரினால் பிறந்த பொன்னாடு பற்றி என்ன பேசுவது?

பெற்ற தாய் பிச்சையெடுக்க மகன் கும்பகோணத்தில் கோதானம் செய்யும் கூட்டத்தினர் இன்றும் ஒழியாத நிலையில், பிறந்த பொன்னாடு பறிபோவது பெரும் அதிசயமல்ல.

"கல்வி சிறந்த
தமிழ்நாடு-புகழ்க்
கம்பன் பிறந்த
தமிழ்நாடு-நல்ல
பல்விதம் ஆயின
சாத்திரத்தின் மணம்
பார் எங்கும்
வீசும் தமிழ்நாடு".

இந்தப் புகழுக்குத் தமிழர் எங்கு வாழ்ந்தாலும் மறுபிறவி அளிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஸ்ரீராம நவமி உற்சவம் 18ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்று காலை ராமபிரானுக்கும், ஸ்ரீசிதா பிராட்டிக்கும் மான விஷேச பூஜை அபிஷேக ஆராதனையும், மாலை உற்சவமும் நடைபெறும்.

## "கஷ்டங்கள், துன்பங்கள் மத்தியிலும்

# கலை, கலாசாரங்கள் பேணப்பட வேண்டும்"

— டாக்டர் சுகந்தன்

[பண்டத்தரிப்பு]

"எத்தனை கஷ்டங்கள், துன்பங்கள் ஏற்பட்டபோதும் எமது பாரம்பரியமிக்க கலை, கலாச்சாரங்கள் பேணி வளர்க்கப்படவேண்டியது அவசியமானது. தமிழர் நாகரிகத்தில் பரதநாட்டியக்கலை தெய்வீக மணம் வீசும் தனித்துவமானதோர் கலையாகும். மூவேந்தர்களினால் போற்றி வளர்க்கப்பட்ட இக்கலையை எமது ஈழத்திலும் பயின்று கலைத்தாய்க்குச் சேவையாற்றிய பலர் இருக்கின்றார்கள். இவ்வரிய கலையை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமிழகம் சென்று பயின்று வந்துள்ள செல்வி சந்திரகாந்தா சங்கரப்பிள்ளையின் கலை ஆர்வத்தை பாராட்டாமல் இருக்கமுடியாது"

இவ்வாறு அடையாறு ஸ்ரீ கே இலட்சுமணனின் மாணவியும், மாதகலைச் சேர்ந்தவருமான செல்வி சந்திரகாந்தா சங்கரப்பிள்ளையின் பரதநர்ட்டிய அரங்கேற்றத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் வடபிராந்திய ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி குறிப்பிட்டார்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இந்த அரங்கேற்றத்திற்கு அகில இலங்கை அண்ணா தி. மு. க.வின் பொதுச்செயலாளர் திரு. பொன். மதிமுகராசா தலைமைவகித்தார்.

டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், சில ஆண்டுகளுக்கு முன்பு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வாரத்திற்கு இரு பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சிகளாவது இடம்பெற்று வந்தன என்றும், தற்போதைய பதட்டமான சூழ்நிலையில் அங்கு இதுபோன்ற அரங்கேற்ற நிகழ்ச்சிகளை நடாத்த முடியாத கட்டத்திலும் இங்கு இந்த நிகழ்ச்சி நடைபெறுவது மிகவும் மகிழ்ச்சியைத் தருவதாக உள்ளது என்றார்.

அண்ணா தி. மு. க. பொது செயலாளர் திரு பொன். மதிமுகராசா தமது தலைமையுரையின்போது குறிப்பிட்டதாவது: பரதநாட்டியக் கலை சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கே சொந்தமாக இருந்தது. பரதநாட்டியக் கலையை பயின்றவர்களுக்கு சமூகத்தில் மதிப்பும் அந்தஸ்த்தும ஏற்பட அண்மையில் காலம் சென்ற பரதநாட்டிய மேதை திருமதி ருக்மணி அருண்டேல் போன்றவர்களின் கலைச்சேவையே காரணமாக அமைந்தது" என்றார்.

இவ்வரங்கேற்ற வைபவத்தில் யாழ். மாநகர சபை முன்னாள் உதவி மேயர் திரு. ஆ துரைராசசிங்கம், திரு. வீரசுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

## பண்டிதமணி நினைவாக பண்பாட்டு நிலையம்

(யாழ்ப்பாணம்)

"சைவத் தமிழ்ப் பண்பாட்டை வளர்ச்சியடையச்செய்தவர் நாவலர் பெருமான். அவரை நாம் பார்க்க கொடுத்துவைக்கவில்லை. நாவலர் பெருமானைப் பின்பற்றி வாழ்ந்து வழிகாட்டிய இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை தமது செயல்களால் தமிழ்ப்பேரறிஞர் என்று எல்லாராலும பாராட்டப்பட்டார். அவர் ஞாபகமாக நாவலர் பாடசாலை மண்டபத்தில் நாவலர் சைவத் தமிழ்ப் பண்பாட்டு நிலையம் ஒன்று அமைக்கப்படல் வேண்டும் என்ற ஆலோசனை மிகவும் வரவேற்கக்கூடியதே"

யாழ். கல்வித்திணைக்களத்தில் திரு. அ. பஞ்சாட்சரத்தின் தேவாரத்துடன் ஆரம்பமான நாவலர் தர்மகர்த்தா சபைக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கிப் பேசிய யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். கல்வித்திணைக்களத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் பேசுகையில் "நமது நாட்டின் கலாசாரச் சிறப்பை உலகறியச்செய்தவர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். நாவலர் சொத்து, நாவலர் நோக்கங்களுக்குப் பயன்படவேண்டும் என்று பலதடவைகளில் எமக்கு ஆலோனை வழங்கி வந்த பண்டிதமணி அவர்களது நினைவாக கல்வித்திணைக்கள நிர்வாகத்தின் கீழ் நாவலர் சைவ தமிழ்ப் பண்பாட்டு நிலையம் ஒன்றினை வண்ணை நாவலர் பாடசாலை மண்டபத்தில் அமைப்பது மிகவும் பொருத்தமாகும்" என்றார்.

குறித்த பிரேரணையை ஆதரித்து வழிமொழிந்து பேசினர் பண்டிதமணி வித்துவான் திரு. இ. திருநாவுக்கரசு பிரேரணையைச் சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டதையடுத்து ஸ்ரீ. ப சிவஞான சுப்பிரமணியம், யாழ் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன், அ. பஞ்சாட்சரம் ஆகியோர் நாவலர் தர்மகர்த்தா சபை எடுக்கவேண்டிய முயற்சிகள் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

அடுத்த மாதம் 9ந் திகதி வெள்ளிக்கிழமை பண்டிதமணி நினைவஞ்சலிவிழாவைவண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடத்துவதென்றும், பண்டிதமணி அவர்களது நிழற்படத்தைக் கல்வி அதிபதி திரு. இசுந்தரலிங்கத்தைக்கொண்டு திறந்து வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## இன்று கலாநிதி தியாகராசா 70-வது பிறந்த தினம்

# அவர் ஒரு இலட்சியப்பிறவி

நூலறிவால் மாத்திரம் ஒருவனை சான்றோனாக முடியாது. நல்லோர் வழி நின்று தம்மைப் பண்படுத்தியபோது தான் ஒழுக்கமுடையவனாகப் பிறர்க்குப் பயன்படமுடியும்.

இன்று பைபிள் குறிப்பிடும் 70 வயதைப் பூர்த்தி செய்த அமரர் கலாநிதி தியாகராசாவின் நூலறிவை அவருடைய நாமத்துக்கு ஒளி ஊட்டும் பல் கலைக்கழகப்பட்டங்கள் நிருபிக்கின்றன. சென்னைப் பல்கலைக் கழகத்தின் M.A., M.Litt., போதுமானவையன்று என்ற காரணத்தால் தாம் பொருளியலில் செய்துவந்த ஆராய்ச்சியைத் தமது 65வது வயதில் பூரணப்படுத்தி Ph D. பட்டம் பெற்றார். "வாழ்நாள் முழுவதும் கல்வி" என்ற புதிய கோட்பாட்டுக்குச் சிறந்த உதாரண புருஷர் இவர்.

'கடசறக் கற்ற கல்விக்குத் தக்க முறையில் நிற்க' சுமார் 25 வருடம் தாம் பிறந்த பொன்னாட்டில் தமது முந்தையர் கல்வி பயின்ற காரைநகர் இந்துக் கல்லூரியை நாட்டின் சிறந்த கல்லூரிகளில் ஒன்றாகக் கட்டியெழுப்பினார்.

இக்கல்லூரியை நிர்வகித்த காலத்தில் பல்லாயிரம் மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியில் அவருடைய அழிவிலா ஆளுமை தெளிவுபெற்றது.

உலகப் புகழ்பெற்ற தத்துவ மேதை ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் கனவில் உதயமான மதனப்பளளியில் உள்ள ரிஷவாரியில் பிரம்மஞான சங்கத்தால் நடத்தப்பட்ட கல்லூரியில் பெற்ற பெறுபேறே இவரை ஒரு தேசத் தொண்டனாக வேண்டுமென்ற பேரவாவும், மகாத்மா காந்தியின் தேசியத்தில் அபிமானமும் அளித்தன.

தெய்வப்பற்று, தேசப்பற்று, மொழிப்பற்று என்ற முப்பெரும் பண்புகளுக்கு உரமூட்டிய சுப்பிரமணிய பாரதியின் பாட்டுக்களை இவர் பாடும்போது அவற்றின் தாக்கம் இவருடைய வாழ்வில் எத்தகையதென்பது புலப்படும்.

இந்தப் பின்னணியில் காரை நகருக்குச் சிறப்பாகவும் வட்டுக்கோட்டை என்ற பாராளுமன்றத் தொகுதிக்குப் பொதுவாகவும் அமரர் தியாகராஜா ஆற்றிய தொண்டுகள் அளப்பரியவை.

தொண்டிற் சிகரமாக விளங்கும் காலத்தில் எதிர்பாராத வகையில் காலன் அவருடைய இவ்வுலக வாழ்வுக்கு முடிவு கட்டினான். அவர் மறைந்து இன்று ஐந்து வருடங்களாகின்றன. மறைந்தும் மறையாத இப்பெருந்தகையின் பிறப்பே பாராட்டுக்குரியதாகும்.

மக்கள் சேவையில் ஈடுபடும் மகான்கள் மகேஸ்வரனின் சிறப்பம்சங்கள். இதனை உணர்ந்த மக்கள் நன்றிக்கு அறிகுறியாக இந்தத் திவ்விய தினத்தை அவர் வாழ்ந்துவந்த காரைநகர் இல்லத்தில் அமைதியாக, அழகாக 'விருந்தோம்பல்' என்ற அவருக்கு இதமான பண்புக்கமையக் கொண்டாடுகின்றனர். தந்தையிட்ட பெயரை மைந்தன் காரணப் பெயராக்கியதே அவருடைய நாமம் என்றும் நிலைத்திருக்கக் காரணமாகியது.

எஸ். இராசநாயகம்.

## வேம்படி விநாயகர் தேர்

[யாழ்ப்பாணம்]

யாழ். கடைத்தெரு வேம்படி ஸ்ரீ சித்திவிநாயாகப் பெருமான் தேர்த்திருவிழா இம் மாதம் 19ம் திகதிசனிக்கிழமை காலை 7-45 மணிக்கு பூஜையுடன் ஆரம்பமாகும்.

20ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை தீர்த்தத்திருவிழாவும் 21 ம் திகதி திங்கட்கிழமை சங்காபிஷேகமும் பூத் தண்டிகையில் சுவாமி உலாவருதலும் நிகழும்.

## வை... ப...

இந்து ... அண்மையில் ... கக்கண்காட... தமான பு... இலங்கையி... மூன்று கல... திருந்தன, ... யாழ்ப்பாண... ராக் கல்லூ... போற்றுதற்... கைய சிறப்... மையானது... துமான ப... கத்தே கொ... தியாலயத்தி... மாணவர்கள்... படுத்தத் ... இவ்வாறு ... ணிப்பாளர் ... ரலிங்கம் ய... வரா வித்தி...



## ஸ்வராக் கல்லூரிக்கு ப்பாளர் பாராட்டு!

)

அமைச்சு
த்திய புத்த
சமயசம்பந்
களை அகில
கூடுதலாக
மகாடுத்
தலிடத்தை
வைத்தீஸ்வ
ற்றுள்ளமை
இதத்
ய்ந்த பழ
வுமது மிக்க
ளை தன்ன
இவ் வித்
நூலகத்தை
ளும் பயன்
கூடாது''
கல்விப்ப
இரா. சுந்த
வைத்தீஸ்
தில் புனர

மைப்பு செய்யப்பட்ட அதன் நூலகத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் கூறினர்.

வைத்தீஸ்வரா வித்தியாலய அதிபர் சி. சரவணபவன் விழாவுக்கு தலைமை வகித்தார். செல்வன் க. சிவானந்தன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

கல்விப் பணிப்பாளர் திரு. இரா. கந்தரலிங்கம் தமதுரையில் '' தனியார் கல்விக் கூடங்களின் கல்வி புகையிரதத்தில் பெறும் பார்சல் சாப்பாடு போன்றது. பாடசாலைவகுப்பறைகல்விவீட்டில்அறுசுவையுடன் சாப்பிடுவது போன்றது என்ருர்.

யாழ்ப்பாண வட்டாரக் கல்வியதிகாரி திரு. இ. சிவானந்தனும் இவ் விழாவில்உரையாற்றினர்.

அதிபர் திரு. எஸ். சிவசரவணபவன் உரையாற்றுகையில் அண்மையில் யாழ்பபாணத்தில் நூலகம் எரியூட்டப்பட்டதாயினும் புனரமைப்புச் செய்யபபட்ட இந்நூலகத்தை மீண்டும் மாணவர்கள் பயன்படுத்தவழி செய்தமை பாராட்டுக்குரியது என்ருர். செல்வி திருநாவுக்கரசு ஞானம்பிகை நன்றி கூறினர்.

## ''நாம் உணவு உற்பத்தியில் கவனம் செலுத்துவது அவசியம்''

[மாவிட்டபுரம்]

''இனவிடுதலைப் போராட்டத்தில் உணவு உற்பத்திப் போராட்டமும் மிகவும் அவசியமானதாகும். ஆகவே இன விடுதலைப் போராட்டத்துடன் உணவு உற்பததியிலும நாம் கவனம் செலுத்த வேண்டும்'. இதற்காக அனைவரும் ஒன்று பட்டு உழைக்க வேண்டும்.

இவ்வாறு வட பிரதேச சர்வோதய இயக்க அமைப்பாளர் திரு கே. கதிரமலை ஊரெழு பயிர்ச் செய்கை உத்தியோகத்தா பரிவில இடம் பெற்ற சிறு விவசாயிகள் சம்மேளன அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

ஊரெழு கிழக்கு வளர்பிறை சனசமூக நிலைய முன்றலில் ஊரெழுபயிர்ச் செய்கை உத்தியோகதத்தர் திரு. சி. சக்திகிரீவன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

திரு. கதிரமலை மேலும் பேசுகையில் 'எமது பிரதேசம் இன்று பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இருக்கிறது. மேலும் நெருக்கடிகள் அதிகமானல் எமக்கு உணவு விநியோகமும் நிறுத்தப்படலாம் அவ்வாருன நிலையில் எமது மக்கள் பட்டினிச்சாவு காரணமாக மாள நேரிடும். ஆகவே நாம் ஒவ்வொரு வீடுகளிலும் சிறு அளவிலாவது வீட்டுத் தோட்டங்களை அமைக்க வேண்டும்' என்ருர்.

ஊரெழு கிராமம் பயிர்ச் செய்கையில் முன்மாதிரியான கிராமமாகும். வட பிரதேசத்தில் மாதிரி வீட்டுத் தோட்டக் கிராமமாக சர்வோதய இயக்கம் இக் கிராமத்தை தெரிந்தெடுத்து பல்வேறு உதவிகளை அளித்து வருகிறது. என்ற அவர் இவற்றை இப்பகுதி மக்கள் பயன் படுத்தி உணவு உற்பத்தியில் ஆர்வத்துடன் செயற்படவேண்டும் என்ருர்.

ஊரெழுபயிற்செய்கை உத்தியோகத்தர் திரு. சக்திகிரீவன் தமது தலைமையுரையில் '' விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்னைகளை எதிர் கொண்டு விடிவு காண்பதற்கே இச்சம்

[7ம் பக்கம் பார்க்க]

## கல்வியுடன் விளையாட்டு அவசியம்

(மாவிட்டபுரம்)

மாணவர்களுக்குகல்வியுடன் விளையாட்டு முக்கியமானது. அவர்கள் அறிவு வளர்ச்சி பெறும்போது உடல் உள வளர்ச்சிக்கு விளையாட்டு அவசியமாகிறது. ஆகவே வருடா ... விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி அவர்களுக்கு ஊக்கமளிக்க வேணடியதவசியம்''

இவ்வாறு காங்கேசன்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. பொ.சிவஞானசுந்தரம் வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

வித்தியாலய அதிபர் திரு. ப சிவராசா தலைமையில்

[7ம் பக்கம் பார்க்க]


# விலை குறைவு என்று காலப்போக்கில் பணத்தை விரயம் செய்வதா!

நீங்கள் வாங்கும் ஒரு பொருள் விலை குறைந்ததாக இருக்கலாம். ஆனுல் அதன் தரத்தையும் ஏனைய சிறப்பம்சங்களையும் சிந்தித்துப்பார்க்க வேண்டாமா? ஆயுள் முழுவதும் உபயோகிக்கப்பட வேண்டிய பொருளொன்று தேவைப்படும் போது இவற்றை மேலும் உன்னிப்பாகக் கவனிப்பது அவசியம்



உங்கள் இல்லங்களுக்கும் கட்டிடங்களுக்கும் நீர் வழங்கத் தேவையான பி.வீ.சீ. குழாய்கள், இணைப்புகள், பீலிகள் என்பன நீடித்துழைக்க வேண்டும். மீண்டும் மீண்டும் அவற்றைக் கழற்றிப் பொருத்தி உங்கள் பணத்தை வீணுக்க முடியாது. இந்த வகையில் உங்களுக்கு உறுதுணையான பி.வீ.சீ. குழாய் - எஸ்-லோன்.

செலவோடு செலவாக எஸ்-லோன் குழாய்களைப் பொருத்தி விடுங்கள். அதன்பின் ஆயுள் முழுவதும் அவற்றை யிட்டுகவலையோ கொள்ளத் தேவையில்லை-அவை அவ்வளவு நம்பகமானவை; உறுதியானவை; நீடித்துழைப்பவை.

மேலும் எஸ்-லோன், விற்பனையின் பின்னர் சிறந்த பராமரிப்புச் சேவையை வழங்குகிறது; எமது நீண்டகால அனுபவத்தையும் கவனிப்பையும் பக்கபலமாகவும் கொண்டது.

S-lon

ல் தர பி.வீ.சீ. குழாய்



GARADS

மீட்டர் ரூபா 13.05 தொடக்கம்

த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்,
467, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி: 93716-9.

## 'சசிதரனை' விடுதலை செய்யுமாறு அகதிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

திருமலை செல்லும் வழியில் படகில் வைத்து, கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட சங்கிலியன் புனர் வாழ்வுகழக தலைவர் டாக்டர் சசிதரனை விடுதலை செய்யுமாறு அகதிகள் கோரியுள்ளனர்.

திருமலை, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மட்டக்களப்பு பகுதிகளிலிருந்து வெளியேறிய அகதிகள் வெளியிட்டுள்ள பிரசுரத்தில் இக்கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''பல இடைஞ்சல் இன்னல்கள் மத்தியில் எமது உயிர்களை எப்படியோ காப்பாற்றிக்கொண்டு சொத்து சுகங்களை இழந்து யாழ். நகர் வந்து தவித்துக் கொண்டு இருந்த எம்மை, யாருமே கவனிக்காது அனுதரவாக விட்ட போதும் கைதூக்கி விட்ட தியாகச் செம்மல் சசிதரன், எமது நலனிற்காக தனது வீட்டையும் உறவினரையும் மறந்து பொதுசேவையில ஈடுபட்ட தொண்டன் டாக்டர் சசிதரன். இவரா கைதுசெய்யப்பட்டார்?

''இரண்டு பிஞ்சுப் பாலகர்களின் தந்தையான இவரின் மனைவியும் பிள்ளைகளும் தவித்துக் கொண்டிருக்கின்றனர். யாழ். அரச அதிபரே! பொது மககளே!! பொதுஸ்தாபனங்களே!!! மதகுருமாரே உங்களை பணிவாக வேண்டுகின்றோம்.

''எமது நன்மை கருதிய படகில் சென்று கொண்டிருந்த போது கடற்படையால் கைதுசெய்யப்பட்டு திருமலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள இவரையும் இவருடன் கைது செய்யப்பட்ட ஏனைய இடம்பெயர்ந்த மக்களையும் விடுவிக்க ஆவன செய்து மேலும் தவித்துக்கொண்டிருக்கும் எம்மைக்காப்பாற்ற வழி செய்யும்படி உங்கள் பாதங்களை வணங்கி வேண்டுகின்றோம்.''

## 'இலக்கியத்தில் தளபதியாக திகழ்ந்தவர் டானியல்'

### அஞ்சலிக் கூட்டத்தில் 'வித்தி'

[ஐ. சண்முகலிங்கம்]

''தற்கால எழுத்தியலிலும், சமுதாயக் கிளர்ச்சியிலும் கவனத்தைச் செலுத்தி வந்த ஓர் இயக்கத்தில் தலைசிறந்த தளபதியாகத் திகழ்ந்த டானியலுக்கு நான் அஞ்சலிசெலுத்துகிறேன். ஒருபுதிய இலக்கியப்பண்பாட்டை உருவாக்குவதில் முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்களுள் முக்கியம் வாய்ந்தவராக அவரை நான் காண்கிறேன்.''

இவ்வாறு, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், மக்கள் கலை இலக்கிய பெருமன்றம், முன்னேடிகள் இலக்கியக்குழு, கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள், மாற்று சஞ்சிகை வட்டம் ஆகியன இணைந்து அமரர் கே. டானியல் மறைவு குறித்து நடாத்திய அஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தன் கூறினார்.

அடுத்து, யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு சி வி. கே. சிவஞானம் தமது அஞ்லி உரையில் ''தனிச் சொத்துடமை வறுமை வரக் காரணம் என்றும் நில உடமை சாதி அடக்குமுறை இருக்கக் காரமென்றும் டானியல் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார் தனது கருத்தை வலியுறுத்துவதில் டானியல் கெட்டிக்காரராவார்'' என்றார்

இவ்வஞ்சலிக் கூட்டத்தில் பனம்பொருள் அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. நடராசா தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத் தலைவர் திரு. கே. கிருஷ்ணபிள்ளையுட்பட பலர் உரையாற்றினர்கள் [ஐ]


## "நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்தும்போது உடல்வலி ஏற்பட்டால் உடனடி நிவாரணம் தருகிறது பனடோல்"

செல்வி வாசுகி சண்முகம்பிள்ளை.
பரதநாட்டியத்தாரகை.



**வலிக்கும் காய்ச்சலுக்கும் எதிரான, ஒவ்வொருவரும் நம்பக்கூடிய நிவாரணி.**

பனடோல் வலிக்கும் காய்ச்சலுக்கும் எதிரான நிவாரணி, அது நங்கையர் நலக்குறைவுக்கும், உடல்வலி வேதனைகளுக்கும் நிவாரணம் தருகிறது பனடோல் அதிமென்மையான வயிற்றைக் கூடப் பாதிக்காத துரித நிவாரணி என்பதால்தான் உலகெங்குமுள்ள டாக்டர்கள் பனடொலைச் சிபாரிசு செய்கிருர்கள்.




விலை - வில்லையொன்று
50 சதம்

# பனடோல்

தயாரித்து விநியோகிப்போர்.
மக்வூட்ஸ்-விந்த்ரெப் லிமிட்டெட்

**துரிதநிவாரணி... அது வயிற்றைக் கூடப்பாதிப்பதில்லை.**

JWT MW 1762


## இன்றைய பலன்

மாதம்—சித்திரை
திகதி—4 [17-4-1986]
கிழமை—வியாழக்கிழமை
திதி—அட்டமி பி இ வரை
நக்ஷத்திரம்—புனர்பூசம்
பி. ப. வரை

**மேடம்:** வித்தையில் வெற்றி காணுவீர். வேண்டியது கிடைக்கும். நுட்பமான தொழில் புரிவோர் பாராட்டப்படுவர். பணவரவும் உண்டு.

**இடபம்:** நினைத்த காரியத்தில் வெற்றியுண்டு பகைத்தவர்களே பாராட்டுவார்கள், விருந்தினர் வருகையுமுண்டு

**மிதுனம்:** அதிக ஆசையினுலே அவஸ்தைப்படுவீர்கள். சிலர் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளலாம். சிலரின் குறுக்குவழித் தலையீடு கோபத்தைக் கிளறிவிடும்

**கடகம்:** எண்ணத்தின் தாக்குதலால் நெஞ்சம் புண்ணுகும். சிறு விடயத்திற்கும் குறைகேட்க நேரும். இன்று தனிவழி நாட்டம் நன்று.

**சிங்கம்:** அலைபோதும் மனத்துடன் அமைதி குன்றும் வலை வீசும் எதிரிகளும் காத்திருப்பர், சிநேகித வழியால் சஞ்சலமும் உண்டு

**கன்னி:** மகிழ்ச்சிதரும் செய்தியொன்று கிடைக்கும் பிரிந்தவர் வாழ்வில் மீண்டும் இணைவர் குடும்பத்தின் உறவு நெருங்கியதாக இருக்கும்.

**துலாம்:** வாகனம் செலுத்துவோர் வாழ்வில் இன்று வெற்றித் திருநாள். வெளியிடத்துத் தொடர்பும் பெருகும். சகோதர சுகக்குறைவும் உண்டு.

**விருச்சிகம்:** மகிழ்ச்சிதரும் செய்தியொன்று கிடைக்கும். பிரிந்தவர்கள் வாழ்வில் சேர்க்கைக்கு இடமுண்டு. குடும்பத்தில் சுகமும் உண்டு.

**தனுசு:** தன்மானத்துடன் தனவரவிற்கும் இடமுண்டு. குடும்பத்தில் தென்றல் வீசும். உறவினர்கள் படையெடுப்பார்கள்.

**மகரம்:** எவ்விதத்திலும் நன்ருக ஆலோசித்தபின்பே முடிவெடுக்கவும். ஆணவப் போக்கைத் தவிர்க்கவும். எச்சரிக்கை வேண்டும்.

**கும்பம்:** கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும் எதிரிகள் சதிசெய்யக் காத்திருப்பர். ஆயுத பீடைக்கும் இடமுண்டு.

**மீனம்:** ஏக்கத்தின் சாயல் தாக்கும் எதிர்பாராத விதமாக சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடும், நாவடக்கம் நன்று.

திருமலை
வே. ரவீந்திரன்

## அரசு-தாதிமார் ..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

போக்குவரத்து இடர்பாடுகள் காரணமாக இன்று வேலைக்குத் திரும்பும்பட்சத்தில் இல்லையெனவும் தெரியவருகிறது. [வா]

## நாம் உணவு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மேளனம் அமைக்கப்படுகிறது என்றூர்''.

மற்றும் திருமதி பொன். கிருஷ்ணபிள்ளை, மற்றும் திரு ப. இராசேந்திரன், திரு. சி. கணேசு, திரு. த. கிருஷ்ணராஜா, திரு. க. வை. தனேஸ்வரன், திரு. இ. கிருஷ்ணபிள்ளை, திரு. சு. சபாரத்தினம் திரு. தி. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினூர்கள்.

## கல்வியுடன்...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

நடந்த இவ் வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் ''இவ் வித்தியாலயம் கல்வித் துறையில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. மேலும்வளர்ச்சி பெற பெற்றூர் ஆசிரியர் உதவ வேண்டும்'' என்றூர்.

வித்தியாலய அதிபர் திரு. மு. சிவராஜா பேசுகையில் மனையியல் ஆய்வு கூடத்தை திருத்த உதவ வேண்டுமென்றும் ஆசிரியர் பற்ருக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

விளையாட்டுப் போட்டியில் முத்துக்குமாரு இல்லம் முதலாமிடத்தையும் சுப்பிரமணியம் இல்லம் இரண்டாமிடத்தையும் சின்னத்தம்பி இல்லம் மூன்ருமிடத்தையும் பெற்றன

## கடைசிநேர வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

682021772 V இலக்கமுடைய எனது அடையாள அட்டை இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து எம்மிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். அ. ஞானதாஸ், மே/பா. த. அருணசலம், இணுவில்கிழக்கு, இணுவில். [C 1816]

497190550 V இலக்கமுடைய எனது அடையாள அட்டையும், தொழில்நிறுவன அடையாள அட்டையும் மானிப்பாய் மருதடி விநாயகர் கோவிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து என்னிடம் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. ஞானப்பிரகாசம், அளவெட்டி தெற்கு, அளவெட்டி. [C 1817]


லிடோ Jaffna

10-30, 2-30, 6-30

சிவாஜி, உஷாநந்தினி சாரதா, எம். ஆர். ஆர். வாசு நடித்த

**என்னைப்போல் ஒருவன்**

(கலர்)

5வது வாரம்

வெலிங்டன்

10-30, 2-30, 6-15

சிவகுமார், மோகன் அம்பிகா, கவுண்டமணி நடித்த

**நான் பாடும் பாடல்**

(கலர்)


அளவெட்டி தெற்கு கலைவாணி சனசமூக நிலையத்தினுல் 14-04-1986 அன்று குலுக்கப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டில் பரிசில் பெறும் இலக்கங்கள்:

1ம் பரிசு - 818
2ம் பரிசு - 1818
3ம் பரிசு - 1661

10 ஆறுதல் பரிசில்கள் பெறும் இலக்கங்கள் முறையே:

833, 1252 1854 1505, 943, 392, 1703, 1846, 245, 163

(C-1813) செயலாளர்.

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

தடைசெய்யப்பட்ட வலய ஒழுங்கு விதிகளினுல்

### பாதிப்படைந்த மீனவருக்கான நிவாரணம்

மேற்படி நிவாரணத்துக்கு சமூகசேவைப்பகுதியினர், யாழ். உதவி அரசாங்க அதிபர் மூலம் வழங்கப்பட்ட பங்கீட்டு அட்டைகளை, பாவனையாளர்கள் தத்தமது கிளைமுகாமையாளர் / உத்தரவுபெற்ற வியாபாரிகளிடம் 20-04-86க்கு முன் ஒப்படைத்து, பொதுமுகாமையாளரின் கையொப்பமிடப்பட்டபின்னரே அதற்குரிய பொருட்களைப் பெறமுடியும் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

பொதுமுகாமையாளர்,

127. கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்,
16-04-86. (A-587)

## வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



வைத்திய கலாநிதி
**நவசிவாயம் துரைரத்தினம்**

வைத்தியக் கலாநிதி நவசிவாயம் துரைரத்தினம் 16-3-86 அன்று தேவலோக மடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியம் 19-4-86 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றூர், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறேம். தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை.

திருமதி துரைத்தினம் குடும்பம்

அராலி கிழக்கு, அராலி. (C 1810)

## இந்திய...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

''இலங்கையின் கிழக்குப் பகுதியில் பாரம்பரியமான தமிழ்ப் பிரதேசங்கள் பறிபோகின்ற போக்கு மேலும் மோசமடைந்துள்ளது. திருகோணமலை மாவட்டத்திலிருந்து மட்டும் 79 கிராமங்களிலிருந்து தமிழர் விரட்டியடிக்கப்பட்டுக் கட்டை பறிச்சானிலுள்ள பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் புகலடைந்திருந்த போதிலும், அவ்விடங்களிலிருந்தும் அந்த அப்பாவி அகதிகள் மீண்டும் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர், இதே வேலையில் வடக்கில் நிலைமை மோசமாகியுள்ளது.''

## முதலாண்டு நினைவஞ்சலி

திருமதி சுப்பிரமணியம் நாகம்மா

மலர்வு: 23-9-20
உதிர்வு: 27-04-85



எமது குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிவீசி பூரணவாழ்வு வாழ்ந்து எங்களை அரவணைத்த தெய்வமே! உங்களை இழந்து ஆண்டொன்ருகி விட்டது. தங்களின் ஒழிமயமான வழிகாட்டல் எங்கள் குடும்பங்களுக்குப் பெருமை தேடித்தந்து கொண்டேயிருக்கும்.

சுப்பிரமணியம், குடும்பத்தினர்கள்.

கந்தரோடை. C 1821

## லிபியா-

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டுப்பிரசுரத்தையும் சுவரொட்டிகளையும் வெளியிட்டுள்ளது

''உலக அரங்கில் நரபலி வேட்டையாடும் கூட்டத்தைக் கண்டிக்கும் முகமாக யாழ் முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து இன்று வியாழக்கிழமை முழு முஸ்லிம் மக்களும் முற்போக்கு எண்ணம் கொண்ட தமிழ் மக்களும் உங்களது வியாபார ஸ்தாபனங்களைப் பூரணமாக மூடி யாழ். முஸ்லிம் மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்திலும் கலந்துகொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இந்த நாசார வேலையைச்சாதி, மத, இன பேதமின்றி முழுமக்களும் கண்டிப்போமாக. இவ்வாறு அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. [மா]

## செல்வாபுரத்தில்...

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

குடும்பங்கள் தங்குவதற்குப் புதியமுகாம் ஒன்று திறக்கும் பணியில் திருமலைப் பிரஜைகள் குழு மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

இப்பிரச்னை சம்பந்தமாகத் திருமலை அரசாங்க அதிபருக்கும் முறையிடப்பட்டுள்ளது. (மா)

## 150 பவுண்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அவர்களுக்கு இருவர் காவல் நிற்க மற்றவர்கள் கொள்ளையில் ஈடுபட்டனராம்.

இக்கொள்ளையின் சமையலறையில் இருந்த பலகாரங்கள் கூட எடுத்துச்செல்லப்பட்டவாம்.

இக்கொள்ளை நடந்துகொண்டிருந்த சமயம் வீட்டுக்காரர் வெளியே கடைக்குச் சென்றிருந்து விட்டுத்திரும்பி வந்தாராம், அவரை கேற்வாசலில் நின்ற துப்பாக்கி நபர்கள் உள்ளே அழைத்து வந்த அவரிடம் இருந்த மணிக்கூடு, மோதிரம், சேட்பையில் இருந்த 10ரூபா பணம் யாவையும் பறித்தெடுத்தனராம்.

இந்த வீட்டுககாரர்கள் 83ம் ஆண்டு கலவரத்தில் கடைகள் எரிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் வந்தவர்களாம். (ஐ)

## உருக்கமான வேண்டுகோள்

[13 - 04 - 86] ஞாயிற்றுக்கிழமை இரவு, இனந்தெரியாத சிலரால் எனது மோட்டார் சைக்கிள் HONDA 125 - 86 ஸ்ரீ 8497 கடத்தப்பட்டுள்ளது. இந்த மோட்டார் சைக்கிளின் மூலமே எனது குடும்பத்தை பால் வியாபாரம் செய்து காப்பாற்றிவருகின்றேன். இந்த மோட்டார் சைக்கிளை இராசபாதையில் எனது வீட்டுக்கு முன்னுல் வைத்து கடத்திச் சென்றுள்ளனர். இதனுல் நானும் என்னை நம்பியிருக்கும் எனது மனைவி (நோய்வாய்ப்பட்டவர்) நான்கு பிள்ளைகளும் விரக்தியடைந்துள்ளோம். சம்பந்தப்பட்டவர்கள் கருணைகூர்ந்து மோட்டார் சைக்கிளை திருப்பி ஒப்படைக்குமாறு வேண்டுகிறேன்.

அ. முத்தையா.

[C 1823] இராசபாதை, திருநெல்வேலி.

## வட பிராந்திய லொறி உரிமையாளர் சங்க ஆரம்ப

### பொதுக்கூட்டம்

காலம்: 19-4-1986 சனிக்கிழமை, காலை 9 மணி

இடம்- நீர்வேலி அத்தியாயர் இந்துக்கல்லூரி அருகாமையில்

விடயம்
1. லொறி உரிமையாளர்கள் அனைவரும் ஒருமைப்பாட்டின் கீழ் இயங்குதல்,
2. புதிய இயக்குனர் சபை தெரிவு,
3. ஏனைய விடயங்கள் ஆராய்தல்.

சகல லொறி உரிமையாளர்களையும் தவருது சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்ேரும்.

சி. அழகானந்தம், அமைப்பாளர்சார்பில்.

C 1818

## கசிப்பு விற்கத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரத்திலுள்ள குறிப்பிட்ட பகுதியுள் கசிப்பு விற்பது இன்றுமுதல் தடை செய்யப்பட்டுள்ளது:

யாழ். நகரத்தில் இயங்கும் விழிப்புக்குழு ஒன்றியம் மேற்கண்ட முடிவை எடுத்துள்ளது.

மடம்வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தலைவர் திரு. க. கிருஷ்ணன் தலைமையில் இவ்விழிப்புச்குழுக்களின் ஒன்றியக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது இம்முடிவு

[8ம் பக்கம் பார்க்க]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**மரியாம்பிள்ளை சோதிநாதன்**

மலர்வு: 27-09-1948
உதிர்வு: 18-03-1986

அன்பின் உறைவிடமாய் எம்மையெல்லாம் வழிநடத்திய தெய்வமே எங்கு சென்ருய்! உமது பிரிவால் துயருறுகின்ேரும். உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்ேரும்.

மனைவி, பிள்ளைகள், கோகிலவதனி, மதிவதனி, உற்றூர், உறவினர்.

உரும்பிராய் கிழக்கு. (C 1820)

## முதலாண்டு நினைவஞ்சலி



திருமதி
**தங்கரெத்தினம் சிவாலிங்கம்**

தோற்றம்: 28-01-1924
மறைவு: 28-04-1985
திதி; 17-04-1986

எம்மையெல்லாம் இந்த நிலைக்கு உயர்த்தி. எம்மையும் இவ்வுலகில் மற்ேரூர் மதிக்கும் மானிடராக வாழ வழிகாட்டிய எங்கள் அன்புத்தாயின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்ேரும்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை.

உடையார்வளவு நெல்லெண்டை, பருத்தித்துறை.

(C 1788)

## லிபியா மீதான அமெரிக்க தாக்குதல்:

# "சர்வதேச சட்டங்களை மீறுகின்ற செயல்!" ராஜீவ் கண்டனம்

[புதுடில்லி]

''அணிசேரா இயக்கத்தில் அங்கத்துவ நாடான லிபியக் குடியரசு சர்வதேச சட்ட பிரமாணங்களை மீறும் வகையில் ஒருதலைப்பட்சமான தாக்குதலுக்குள்ளாகியுள்ளது; அந்நாட்டின் இறைமையும்ஆபத்துக்குள்ளாகியுள்ளது''

நேற்றுப் பதுடில்லியில் ஆரம்பமான அணிசேரா மண்டல நாடுகளின் இணைப்பு அமைச்சர் மட்ட மகாநாட்டினை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்திமேற்கண்டவாறு குறிப்பிட்டார்'

எவ்விதத்திலும் அமெரிக்காவின் தாக்குதலை எவராலும் நியாயப்படுத முடியாது எனவும் இந்தியப்பிரதமர் மேலும் கூறினர்.

இதேவேளையில், லிபியாமீது அமெரிக்க 'எஸ்-111' விமானங்கள் மேற்கொண்ட இரண்டாவது தாக்குதலின் போது இரண்டு பாரிய மாடிக்கட்டடங்கள் சேதமடைந்ததாகவும் அவற்றிலிருந்த அத்தனை பேரும் கருகிய நிலையில் உருத் தெரியாமல் மரணித்துள்ளார்கள் எனவும் தெரிய வருகின்றது. [ஷ]

## "தொண்டமானாறு முகாமை இடம் மாற்றுக" தர்மகர்த்தாசபை வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

''தொண்டமனாறு இராணுவமுகாமை அவ்விடத்திலிருந்துஉடனடியாகஅகற்றுங்கள். அல்லது இம்முகாமை முன்பு இராணுவமுகாமிருந்த 'உப்புமாவடி' என்ற இடத்துக்கு உடனடியாக மாற்றுங்கள்.''

இவ்வாறு தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய தர்மகர்த்தாக்கள் நேற்றுக் காலை யாழ்.அரசாங்க அதிபர் திரு. எம் பஞ்சலிங்கத்தை யாழ். செயலகத்தில் சந்தித்து வேண்டுகோள் விடுத்தனர்.

திருவாளர்கள் முருகமூர்த்தி, குமாரசுவாமி ஆகியோர் தலைமையில் தர்மகர்த்தாக்கள் யாழ்.அரச அதிபரைச் சந்தித்தனர்.

இவர்கள் விடுத்துள்ள மற்றக் கோரிக்கை, ''சந்நிதி கோயிலைச் சுற்றியுள்ள 48 திருமடங்களிலும் தங்கியிருந்த 5 ஆயிரம்அடியார்களும்இன்று அல்லலுற்ற நிலையில் உணவின்றிக் கஷ்டப்படுகின்றனர். இம்மக்களுக்கு உடனடியாக உணவுப்பொருள்களை வழகிங் உதவுங்கள்''

யாழ்.அரச அதிபர் மேற்படி தர்மகர்த்தார்களின் கோரிக்கைகளையிட்டுத் தாம் உயர் மட்டத்துடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாகக் கூறினர். [ஐ]

## "அகில உலகுக்கும் அச்சுறுத்தல்!' ஈ.பி.ஆர்.எல்.எவ்.

(யாழ்ப்பாணம்)

''லிபியக் குடியரசின் மீது கடந்த திங்களன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் திட்ட மிட்டு நடத்திய விமானத்தாக்குதல் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கொள்கையின் ஓர் அங்கமேயாகும். கிறெனடா மீது தனது ஆக்கிரமிப்புக் கரங்களைநீட்டிய அமெரிக்க ஏகாதிபத்தியம் எந்தநேரமும் நிக்கரகுவா மீதும் தனது ஆக்கிரமிப்புக் கரங்களை நீட்டுவதற்கு ஆயத்தமாகவே உள்ளது.''

இவ்வாறு 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' (ஈ பி. ஆர் எல் எவ்.) வெளியிட்டுள்ள அறியில் தெரிவிக்கப்பட்டுள்து.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

''லிபியக் குடியரசின்மீதான அமெரிக்காவினது தாக்குதலானது, மத்திய கிழக்கு நாடுகளுக்கு மாத்திரமன்றி அகில உலகிற்குமே ஓர் அச்சுறுத்தலாகும்' ஈழமக்கள் புரட்சி விடுதலை முன்னணியானது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இந்த ஆக்கிரமிப்புக் கொள்கையை- நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறது அதே சமயம் அணிசேரா நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள இந்தியாவும், அதன் கூட்டிலுள்ள ஏனைய நாடுகளும் அமெரிக்காவின் இக் காட்டுமிராண்டித் தனத்தை கண்டித்ததை நாம் வரவேற்கின்றோம். அதேவேளை சில காலங்களுக்கு முன்அணிசேரா அமைப்பின் தலைமைப்பொறுப்பை ஏற்றிருந்த சிறிலங்காவானது அமெரிக்கா இஸ்ரேல் போன்றவற்றுடன் கூட்டுச் சேர்ந்து செயல்படுவதன்மூலம் அரபு நாடுகளுக்கு எதிரான போக்கையே கொண்டுள்ளது. இவ்வகையில் சிறிலங்கா அரசுக்கெதிராக சகல முற்போக்கு சக்திகளும் இணைந்துசெயற்படவேண்டும். ஈழ விடுதலைப் போராட்டமானது வெறும் தேசிய விடுதலைப்போராட்டம் அல்ல; ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான போராட்டம் ஆகும்.'' (மா)

## நயினையில் இருந்து படகுப் பயணிகள் விடுவிக்கப்பட்டனர்

[யாழ்ப்பாணம்]

வள்ளக்காரர் தாம் பறிகொடுத்த இராணுவத்தினரின் பணத்தைத் திரும்பவும் இராணுவத்தினரிடம் கொடுத்து இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரயாணிகளை மீண்டும் வள்ளத்தில் ஏற்றி நெடுந்தீவுக்குப் பயணமானுர்கள்.

நெடுந்தீவிலிருந்து குறிக்கட்டுவானை நோக்கிவந்த வள்ளம் நயினாதீவுக்கரையில் தரித்து நின்ற சமயம் இராணுவத்தினர் சிலர் தமக்குச்சில பொருட்களை வாங்கிவருமாறு வள்ளக்காரரிடம் 500 ரூபா பணத்தைக் கொடுத்ததும், இப்பணத்துடன் வள்ளக்காரர் குறிக்கட்டுவானை வந்தடைந்ததும் இனந்தெரியாத நபர்கள் இப்பணத்தைப் பறித்துச்சென்றதும், இதனை வள்ளக்காரர் நயினாதீவு சென்று இராணுவத்தினரிடம் கூறினராம் இராணுவத்தினர் அவ்வள்ளத்தில் பிரயாணம் செய்த பிரயாணிகள் அனைவரையுப் தடுத்து வைத்துக்கொண்டு பணத்தைக் கொண்டுவந்து தரும்படி வள்ளக்காரரிடம் எச்சரித்ததும் தெரிந்ததே.

வள்ளக்காரர் திரும்பவும் குறிக்காட்டுவான்வந்து பணத்தைப் பறிகொடுத்ததால் ஏற்பட்ட நிலைமையை எடுத்துக் கூறி ஒருவாறு பணத்தை மீட்டுப்பெற்றுக் கொண்டுவந்து இராணுவத்தினரிடம் ஒப்படைத்ததைத் தொடர்ந்து இராணுவம் தாம் தடுத்து வைத்திருந்த பிரயாணிகளை போகும்படி விட்டனர் .(ஐ)

கசிப்பு......

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டது.

இவ்வாறு தடைசெய்யப்பட்டுள்ள பகுதி பின்வருமாறு: இராசாவின் தோட்டப்பகுதி, மடம் வீதிப் பகுதி, ஆஸ்பத்திரிவீதிப் பகுதி, மாட்டீன் வீதிப் பகுதி பிரதானவீதிப் பகுதி. இப்பகுதியில் மிகவும் தீவிரமாக மேற்சொன்ன நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. [ஐ]

## வட, கிழக்கிலிருந்து படைகள் வாபஸாகவேண்டும் - 'வாசு'

[காலி]

வடக்கு கிழக்கு பிரதேசங்களிலிருந்து இராணுவம் வாபஸ் பெறப்படவேண்டும். தமிழ் பேசும் மக்களின் பிரச்னை அவர்களுக்குரிய சுயநிர்ணய அடிப்படையிலேயே தீர்க்கப்படவேண்டும். எமது விமோசன அணியைக் கட்டி வளர்ப்பதற்கு நாம் ஒவ்வொரு களத்தையும், சந்தர்ப்பத்தையும் பயன்படுத்துவோம்.

இன்று நடைபெறும்அக்மீன இடைத் தேர்தலில் போட்டியிடும் தமது கட்சி அபேட்சகருக்கு ஆதரவான பிரசாக் கூட்டத்தில் பேசும் போது நவசமசமாஜக் கட்சித் தலைவர் திரு வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு கூறினர்.

## சிங்கள மக்கள்—ராணுவம் மோதலில் சிப்பாய் காயம்

(திருகோணமலை)

திருகோணமலையில் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் வசிக்கும் கிராமத்தில் இராணுவத்தினருக்கும் அக் கிராம மக்களுக்குமிடையே இடம் பெற்ற மோதலில் ஒருஇராணுவச் சிப்பாய் படுகாயமடைந்ததுடன் பொதுமக்களில் சிலரும் காயமடைந்துள்ளனர்.

## "கறைபடிந்த பற்களை அமெரிக்கா மீண்டும் தீட்டுகிறது!" -'ரெலோ'

[யாழ்ப்பாணம்]

லிபியா மீது அமெரிக்கா மேற்கொண்ட ஒருதலைப்பட்சமான தாக்குதல் பற்றி 'ரெலோ' வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

''அபிவிருத்தியடைந்து வரும் நாடான லிபியாவின் மீது வெறி பிடித்த அமெரிக்க நிர்வாகம் பாய்ந்துள்ளது. உலக சமாதானத்திற்கெதிராகஅணு ஆயுத உற்பத்திகளிலும் 'நட்சத்திரப் போர்'களிலும் ஈடுபட்டுவரும் சீழ்பிடித்த அமெரிக்க நிர்வாகமானது தனது கறைபடிந்த பற்களை மீண்டும் ஒருமுறை லியியா மீது தீட்டிப் பார்த்துள்ளது. ஏகாதிபத்தியமானது தனது பொருளாதார நெருக்கடிகளை திசை மாற்றும் பொருட்டு போர்களை வருந்தியழைப்பது ஒன்றும் புதுமையானதல்ல. ஆனாலும் இவ்வாறு கீழ்த்தரமானமுறையில் செற்படுவதன்மூலம்தனது ஏகாதிபத்திய வெறிகளை அப்பட்டமாக வெளிக்கெணர்கிறதுஅமெரிக்க நிர்வாகம்'' [மா]

## உலகத் தமிழர் நிலை அறிய நடவடிக்கை

(வேலணை)

உலகத் தமிழர்களின் நிலை பற்றிய விபரங்களைச் சேகரிப்பதற்காக உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் திரு இரா. நா வீரப்பன் அடுத்த மாதம் பிற்பகுதியில் பல நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

முதலில் லண்டனுக்குச் செல்லும் இவர், அங்கிருந்து டென்மார்க், பாசிஸ், சுவிட்சர்லாந்து, கனடா போன்ற மிகமுக்கிய நாடுகளுக்கும் செல்வார்.

மலேசியாவிலிருந்து தமது பயணத்தை மேற்கொள்ளும் திரு வீரப்பன் 3 வார காலம் தனது பயணத்தை வெளிநாடுகளில் செலவிட முடிவுசெய்துள்ளார்.

## திருத்தவேலை

[யாழ்ப்பாணம்]

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணிஅம்மன் கோவில் திருத்த வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள், யாழ் கச்சேரி பொது சனத்தொடர்பதிகாரி காரியாலயத்தில் நாளை 18ந் திகதி வெள்ளிகாலை திறக்கப்படவிருக்கின்றன.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷனி அம்மன்கோவில் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. த. குலசேகரம் இத்தகவலைத் தெரிவித்தார்.

அச்சமயம் கேள்விப்பத்திரதாரர்களைச் சமூகமளிக்குமாறும்அவர் கேட்டுள்ளார். (க)

## யாழ். அரச அதிபரிடம் முறையீடு: "கைதான 4 மீனவரை மீட்டுத்தருக"

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நாகர் சோவில் கடல்பிராந்தியத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகர் கோயிலைச் சேர்ந்த நால்வரை கடற்படையினர் கைது செய்ததுடன் அவர்களுக்குச் சொந்தமான கட்டுமரத்தையும் இயந்திரப்படகையும் கைப்பற்றியுள்ளனர்.

பலாலி இராணுவ முகாமில் இந்த நான்கு மீனவர்களும் இப்பொழுது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இராமநாதன் பத்மநாதன் [30 வயது] 6 பிள்ளைகளின் தந்தை), தெ. சோமநாதர் (50 வயது), சோ. யோசேப் ஜெயராஜ் (12 வயது), த உதயராஜா (26 வயது) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள்.

கடந்த சனி இரவு இந்த நால்வரும் மீன்பிடித்துக் கொண்டிருந்தபொழுது கைது செய்யப்பட்டதாகவும் இவர்களை விடுவித்துத் தருமாறும் உறவினர்கள் யாழ். அரசாங்க அதிபரிடம் நேற்று முறையிட்டுள்ளனர். (மா)

## மரண அறிவித்தல்

### கயிலாசன் பத்மநாதன் — கல்வயல்

கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த கயிலாசன் பத்மநாதன் இளைப்பாறிய லிகிதர் காலமானுர். இவர் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலை ஆசிரியை திருமதிஇராசலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி கமலாதேவி அருள்தியாகராசா அவர்களினதும், திருமதி திருநாவுக்கரசு சரோஜனி இளைப்பாறிய ஆசிரியை அவர்களினதும் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கல்வயல் வயித்திலிங்கம் தம்பதிகளின் மருமகனும் ஆவார். இவரின் ஈமச்சடங்குகள் 17-04-86 இன்று காலை 10 மணியளவில் நடைபெறும். இவ்வறித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(C 1819) தகவல்; வி சபாநாயகம்.

### திரு. மு. குமரேசர்

திரு. மு. குமரேசர் அவர்கள் [புங்குடுதீவு] காலமானுர். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு, திருமதி முருகேசரின் அன்பு மகனும், பாலகுமார் [பிரான்ஸ்], சாந்தகுமார், உதயகுமார், மோகனகுமார் [மாணவர்கள் யாழ்/மத்திய கல்லூரி ஜெயகுமாரி [மாணவி யாழ்/திருக்குடும்பக் கன்னியர் மடம்] விஜயகுமாரி (மாணவி ஆனைப்பந்தி தமிழ்க் கலவன் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி அன்னமுத்து அப்பையா அவர்களின் மருமகனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் யாழ். இலுப்பையடிச் சந்தி இல்லத்தில் 17-4-86 வியாழன் மாலை 3-00 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்,
மனைவி, மக்கள்.

[C 1809]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126